**செ.வெ.எண் : 945/2017** **நாள்: 09.12.2017**

# லட்சத்தீவுப்பகுதியிலிருந்து 20 படகுகளில் 281 மீனவர்கள் புறப்பட்டு கொச்சின் துறைமுகத்திற்கு வந்தடைய உள்ளனர்.

ஒகி புயலால் பாதிக்கப்பட்டு, தமிழகத்தின் அருகாமை கடற்கரைப் பகுதிகளில் கரை சேர்ந்துள்ள தமிழக மீனவர்களை மீட்டு, பாதுகாப்பாக தமிழகத்திற்கு அழைத்து வருவதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆணையர் திரு.வி.அருண்ராய் இ.ஆ.ப., அவர்கள் கேரள மாநிலத்திற்கும், தமிழ்நாடு கடல்சார் வாரிய துணைத்தலைவர்/ முதன்மை செயல் அலுவலர் திரு.ஏ.ஜான்லூயிஸ்.இ.ஆ.ப., அவர்கள் லட்சத்தீவு பகுதிகளுக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், லட்சதீவு கடலோர பகுதிகளில் (ANDROTT) அன்ரோட், ((KILTAN) கில்டான், (AGATI) அகட்டி (BITRA) பிட்ரா (KADAMAT) கடாமெட் (KAVARATTI) கவரட்டி (CHETLAT) சிட்லாட் ஆகிய கடலோர பகுதிகளில் 20 படகுகளில் கரைசேர்ந்த 281 மீனவர்களில் 10 படகுகள் மூலம் நேற்று (08.12.17) காலை 11 மணி முதல் மாலை 4.00 மணி வரை அனுப்பிவைக்கப்பட்டனர்.

மேலும், லட்சத்தீவு கடற்கரைப் பகுதியான(KALPENI) கல்பேனி துறைமுகத்தில் இருந்து 10 படகுகளில் 114 மீனவர்கள் இன்று (09.12.17) காலை ஆனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். இப்பணியானது தமிழ்நாடு கடல்சார் வாரிய துணைத்தலைவர்/ முதன்மை செயல் அலுவலர் திரு.ஏ.ஜான்லூயிஸ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீன்வளத்துறை உதவி இயக்குநர் திரு.காத்தவராயன் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. அனுப்பிவைக்கப்பட்டுள்ள மீனவர்கள் அனைவரும் நாளை (09.12.17) கொச்சின் துறைமுகத்திற்கு வந்தடைவார்கள் எனத்தெரிகிறது.

இதுதவிர, இலட்சதீவு கவரட்டி பகுதியில் கரை ஒதுங்கிய தமிழகத்தை சார்ந்த 45 மீனவர்கள் அனைவரும் கப்பல் மூலம் இன்று (09.12.2017) காலை 10.30 மணியளவில் பாதுகாப்பாக கொச்சின் துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர். கொச்சின் வந்தடைந்துள்ள இம்மீனவர்கள் கன்னியாகுமரி, தூத்துக்குடி, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை சார்ந்தவர்களாவர்.

கொச்சின் துறைமுகம் வந்தடைந்துள்ள மீனவர்களை, அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆணையர் திரு.வி.அருண்ராய்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. குறிப்பாக, மீனவர்கள் அனைவரும் பாதுகாப்பாக தங்களது சொந்த மாவட்டங்களுக்கு சென்றடைய ஏதுவாக, 3 தனி வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, மீனவர்கள் அனைவருக்கும் உடனடி நிவாரண உதவித்தொகையாக தலா ரூ.2,000/-ம், மருத்துவ பரிசோதனை, உணவு வசதி, குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் ஏற்பாடு செய்யப்பட்டு, அவர்களது சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அண்டை மாநிலங்களின் கடற்கரை பகுதிகளில் கரை சேர்ந்து தமிழம் திரும்பும் மீனவர்களை, அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கும் பணிகளை மீன்வளத்துறை இயக்குநர் திரு.வி.பி.தண்டபானி,இ.ஆ.ப., மற்றும் மீன்வளத்துறை கூடுதல் இயக்குநர் திரு.சமீரன்.இ.ஆ.ப., ஆகியோர் கன்னியாகுமரி மாவட்டத்தில் முகமிட்டு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**